**"கண்ணைக் காப்பது இமை "**
**"மண்ணைக் காப்பது மழை "**

**மதுரை மாநகராட்சி**

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2010ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ம் நாள் வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல் "***

**பொருள் :** தன் உயிர்போல் மன்னுயிரையும் போற்றி எல்லா உயிர்களிடத்தும் அருள் செய்வார்க்குத் தன் உயிர் அஞ்சவரும் தீய வினைகள் உண்டாகா.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

### <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>1) ம.ந.2/34422/09</u>**

இம்மாநகராட்சி பகுதியில் கொண்டியாய் திரியும் மாடுகளை பிடித்து மாநகராட்சி கொட்டில் அடைத்து கீழ் கண்டவாறு அபராதம் விதித்து வசூல் செய்யப்பட்டு வந்தது.

மாடு ஒன்றுக்கு அபாரதத் தொகை முதல் நாள் : ரூ.500/- வீதமும்

கூடுதலான நாள் ஒன்றுக்கு பராமரிப்புத் தொகை ரூ.100/- வீதமும்

மேற்படி வசூல் செய்யப்பட்டு வந்த தொகை, மாடுகளை பிடிப்பது மற்றும் பராமரிப்புகளுக்கு ஆகின்ற நடைமுறை செலவுகள் கூடியிருப்பதாலும் மாடுகளின் தொந்தரவுகள் அதிகமாக உள்ள காரணத்தினாலும் மேற்படி தொகையை கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

மாடு ஒன்றுக்கு அபராதத் தொகை முதல் நாள் ரூ.1000/- வீதமும்

கூடுதலான நாள் ஒன்றுக்கு பராமரிப்புத் தொகை ரூ.200/- வீதமும் உயர்த்தப்பட்ட தொகையை 08.01.2010 முதல் வசூல் செய்யப்பட்டு வருவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 869</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**2) ம.பொ. 2/ம.எ105/09-10**

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு 48ல் கீழநாப்பாளையத் தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் 4.70x3.00M அளவில் ஆறு கடைகளும் 4.20x3.00M மூன்று கடைகளும் அமைக்க மதிப்பீடு ரூ.12.75 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக ஒப்புதலும் அமைக்கப்படும் கடைகளுக்கு முன்னதாக உரிய முறையில் பகிரங்க ஏலம் விட நடவடிக்கை எடுக்க உரிய ஒப்புதலுக்காகவும் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.870**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**3) ம.பொ. 3/04201/2010**

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம், வார்டு எண்.21ல் தத்தனேரி மயானம் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் நவீன எரிவாயு மயானம், சுடுகாடு மற்றும் இடுகாடு அமைந்துள்ளது. இதன் இடுகாடு அமைந்துள்ள பகுதி தற்பொழுது அதிக பயன்பாட்டில் இல்லாததால் சுகாதாரக்கேடாகவும் ஏற்கனவே உரிய அனுமதியின்றி அமைக்கப்பட்டிருந்த சமாதிகள் சேதமடைந்தும் உள்ளது. எனவே சுகாதாரக் கேடாக உள்ள இப்பகுதியை முறைப்படுத்தி பயன்பாட்டிற்குக் கொண்டுவர, மாநகராட்சியில் போதிய வருவாய் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் அரசின் நிதியுதவி கோரப்பட்டது. அதன் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநரால் இடுகாட்டினை நவீன முறையில் மேம்படுத்திட இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் ரூ.80.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது. (உத்திரவு எண். – ந.க.39618 / 2009 / LA 3 நாள்: 29.01.10)

இதன்பேரில் உடனடியாக பணியினை துவக்க வேண்டியுள்ளதால், அனுமதியின்றி கட்டப்பட்ட சேதமடைந்த சமாதிகளை இடித்து அப்புறப்படுத்திடவும் அனுமதி பெற்ற சமாதிகளின் விபரத்தினை புதிதாக கல்வெட்டில் பதிவு செய்யவும் இடத்தினில் பணியினை துவக்கவும் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.871**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) H3/01239/08**

மதுரை மாநகரில் 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திருவிழா, அருள்மிகு கள்ளழகர் திருவிழாவிற்கும், மாட்டுத்தாவணிக்கும் வருகை தரும் பொது மக்களின் வசதிக்காக துப்புரவு பணிகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி, தற்காலிக துப்புரவு ஊழியர்கள் ஊதியம், சாதனங்கள், கிருமி நாசினிகள், பிரச்சார விளம்பர பொருட்கள், தற்காலிக கொட்டகைகள் மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேசமாக ஏற்படும் ரூ.49,80,000/- க்கு (நாற்பதொண்பது லட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) முதலாம் படிவ அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் செய்ய இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை, சென்னைக்கு அனுப்பியதற்கும் கீழே கண்டவாறு பொது சுகாதாரப்பிரிவின் செலவினங்கள் மற்றும் பொறியியல் பிரிவில் செலவினங்களை வழங்கப்பட்டதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு:**

| வ.எண். | உத்தேச செலவினங்களுக்கு ஏற்படும் பணிகள் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவிழா பகுதிகளில் தற்காலிக கொட்டகைகள் அமைத்தல் | 4,60,000- |
| 2. | ஆழ்வார்புரத்தில் கள்ளழகர் இறங்கும் இடத்தில் கிராவல் பரப்புதல் | 4,63,000- |
| 3. | ஓபுளாப்படித்துறை திருவிழா பகுதியில் தடுப்பு ஏற்படுத்துதல், தண்ணீர் வசதிக்கு தற்காலிக தண்ணீர் தொட்டி அமைத்தல் | 2,35,000- |
| 4. | நான்கு மாசி வீதிகள், வடக்கு வடம்போக்கித்தெரு ஆகிய பகுதிகளில் சாலை பராமரிப்பு செய்தல் | 7,24,000- |
| 5. | நான்கு மாசி வீதிகளில் உள்ள சுவர்களில் பெயிண்டிங் பணி செய்தல் | 4,75,000- |
| 6. | 1500 லிட்டர் கொள்ளவு கொண்ட 50 தண்ணீர் டேங்க் வாங்கியது | 3,19,000- |

| வ.எண். | உத்தேச செலவினங்களுக்கு ஏற்படும் பணிகள் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 7 | வைகை ஆற்றின் பகுதி வார்டு எண்:48, 49–ல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்தல் | 3,00,000- |
| 8. | ஓபுளாப்படித்துறை திருவிழாப்பகுதிகளில் பாலம் ஏற்படுத்தியது | 1,25,000- |
| 9. | திருவிழா நடைபெற்ற பகுதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலகத்தின் முன்புறத்தில் மின்வசதி ஏற்படுத்தியது | 4,99,000- |
| 10. | துப்புரவுப் பணி 1) துப்புரவுப் பணியாளர்கள் ஊதியம் | 6,00,000- |
| | 2) சாதனங்கள் | 80,000- |
| 11. | கிருமிநாசினிகள், பூச்சிக்கொல்லிகள், சுண்ணாம்புத் தூள் மருந்துகள் முதலியன வாங்கியது. | 7,00,000- |
| | மொத்த செலவினம் | 49,80,000- |

**<u>மாமன்ற தீர்மானம் எண்.872</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 13.01.2010**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25-ம் நாள் வியாழக்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) சி.டபிள்யு.3/ 2156 /2010**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 01.02.2010-ம் தேதி நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.873**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) ந.பொ.1/19479/08**

மதுரை மாநகராட்சியின் சார்பில் வைகையாற்றில் ஏற்கனவே மதுரை வாழ் மக்களுக்கென கோச்சடை மற்றும் மணலூர் குடிநீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டு முன்பு பயன்பாட்டில் இருந்தது. தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.9.15 கோடி செலவில் வைகையாற்றின் குறுக்கே கோச்சடை, மேலக்கால் மற்றும் மணலூர் ஆகிய இடங்களில் தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மணலூர் மற்றும் கோச்சடை நீரேற்று நிலையத்தினை புனரமைப்பு செய்து மறுபயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பட்சத்தில் கூடுதல் குடிநீர் மதுரை மாநகருக்கு கிடைக்கப் பெறும்.

ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இல்லாமலிருந்த பதிமூன்று குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளையும் குடிநீரேற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. இதற்காக பதிக்கப்பட்டுள்ள குடிநீர் மெயினில் ஆங்காங்கே இணைப்பு வேலைகளும், வால்வுகள் பொருத்தவும் மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கு குடிநீர் மெயின் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணிகளை நிறைவேற்றிட கீழ்கண்டவாறு பணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| **1** | கோச்சடை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள கிணறுகளில் இருந்து பழுதடைந்த பழைய குழாய்களை மாற்றி புதிய **328** மிமி துழையிட்ட இரும்புக் குழாய்கள் சப்ளை செய்து பதித்து வெள்ளோட்டம் பார்த்தல் | **85.00** |
| **2** | கோச்சடை நீரேற்று நிலையத்தில் பழுதடைந்த மோட்டார்களை மாற்றி புதிய மோட்டார்கள் மற்றும் இரும்புக் குழாய்கள் மாற்றும் பணி | **15.00** |
| **3** | மணலூர் குடிநீர் திட்டத்தில் குடிநீரின் தரத்தை மேம்படுத்த சுத்திகரிப்பு படுகைகள் அமைக்கும் பணி | **80.00** |
| **4** | வைகை வடகரை பகுதியில் இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தை மேம்படுத்த பழுதடைந்த பிரதான நீரேற்று குழாய்களை மேம்படுத்தி மாற்றியமைக்கும் பணி | **50.00** |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 5 | வைகை தென்கரை பகுதியில் இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தை மேம்படுத்த பழுதடைந்த பிரதான நீரேற்று குழாய்களை மேம்படுத்தி மாற்றியமைக்கும் பணி (சிப்பம் – 1) | 89.15 |
| 6 | வைகை தென்கரை பகுதியில் இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தை மேம்படுத்த பழுதடைந்த பிரதான நீரேற்று குழாய்களை மேம்படுத்தி மாற்றியமைக்கும் பணி (சிப்பம்–II) | 99.00 |
| 7 | வைகை முதலாவது மற்றும் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் அமைந்துள்ள குடிநீர் குழாய்களில் மின்னனு நீர் அளவுமானிகள் பொருத்துதல் | 17.00 |
| | மொத்தம் | 435.15 |

மேற்கண்ட பணிகளை நிறைவேற்றிட ரூ.435.15 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் போதிய வருவாய் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட பணிகளை இயக்குதலும் பராமரித்தலும் (Operation and Maintenance Fund ) நிதியுதவியின் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு உரிய ஒப்புதல் வழங்க கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டு பணிகளுக்குரிய ஒப்புதலுக்கும் மேற்கண்ட நடவடிக்கை தகவலுக்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.874**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) Jn.S5/33640/08**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசீய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் நகர்புற உள்கட்டமைப்பு முன்னேற்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளுக்கான தவணைத் தொகை வழங்க மத்திய அரசின் CS&MC கூட்டத்தில் முடிவு செய்ய பிரேரணை அனுப்பப்பட்டு, தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்ட தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை | 13.00 |
| 2. | பாதாள சாக்கடை திட்டம் | 40.12 |
| | கூடுதல் | 53.12 |

மேற்கண்ட திட்டங்களுக்கு மாநகராட்சி நிதித்தொகை 30% சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் மாநகராட்சியில் நிதி இல்லாத காரணத்தினால் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. தற்பொழுது பணிகள் முடிவு பெற்றதற்கான டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதத்திற்கான பில் பட்டியல் வழங்கப்பட வேண்டும். எனவே தற்காலிகமாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி பெறும் வரை பணிகளை தொடர்ந்து செய்ய TUFIDCO நிறுவனத்திடமிருந்து இடைக்கால கடனாக ரூ.35.25 கோடி அனுமதிக்க நகராட்சி நிர்வாக இயக்குனரால் ந.நி.இ. கடிதம் ந.க. 45287/07/Jnn1/நாள்:16.02.2010–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தற்போது TUFIDCO நிறுவனத்தினரால் அனுமதிக்கப்படும் இடைக்கால கடன் தொகை ரூ.35.25 கோடிக்கான வட்டித் தொகையினை அசலுடன் மூன்றாவது தவணை தொகையை அனுமதிக்கும்போது ஈடு செய்து கொள்ள இசைவு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.875**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.வ.1/24688/2007**

மதுரை மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட அசையாச் சொத்துக்களாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுவதற்கும், குத்தகையை புதுப்பிப்பது குறித்தும், திருத்திய நடைமுறைகள் குறித்து வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 03.07.2007ம் தேதிய அரசாணை எண். 92-ல் லைசென்ஸ் காலம் 9 ஆண்டுகள் பூர்த்தியாகும் கடைகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அங்காடி மதிப்பின் அடிப்படையில் மாநகராட்சி கடைகளுக்கு

வாடகை நிர்ணயம் செய்வது உகந்ததாக அமையாது என்பதால், தற்போது கடைகளுக்கு வசூலிக்கப்பட்டு வரும் மாத வாடகை அடிப்படையில் 01.04.2007 முதல் 31.03.2010 வரை முதல் தொகுப்பாண்டுக்கு கீழ்கண்டவாறு வாடகை உயர்வு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.272 நாள் : 27.12.2007-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | 31.03.2007 ல் மாத வாடகை ரூ.500/- முடிய உள்ள இனங்களுக்கு | கூடுதலாக 25% உயர்வு |
| 2) | 31.03.2007 ல் மாத வாடகை ரூ.501/- இருந்து ரூ.3000/- வரை உள்ள இனங்களுக்கு | கூடுதலாக 20% உயர்வு |
| 3) | 31.03.2007-ல் மாத வாடகை ரூ.3001/-ம் அதற்கு மேல் உள்ள இனங்களுக்கு | கூடுதலாக 15% உயர்வு |

மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த கடைகள் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகாத காரணத்தால் 01.04.2007 முதல் உயர்வு செய்யப்படவில்லை.

எனவே, அரசாணையின்படி முதல் தொகுப்பாண்டு 31.03.2010 தேதியுடன் முடிவடைவதால், இரண்டாவது தொகுப்பு ஆண்டுக்கான 01.04.2010 முதல் 31.03.2013 முடிய காலத்திற்கு மாநகராட்சியின் அசையா சொத்துக்கள் ஆன கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவைகள் தற்போதுள்ள 31.03.2010-ம் தேதிய மாத வாடகை தொகையில் 15% வீதம் வாடகை உயர்வு செய்யவும், மாட்டுத்தாவணி பேருந்து நிலைய கடைகள் 01.04.2008ம் தேதியில் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தி ஆகிவிட்டபடியால் 01.04.2008ம் தேதியில் இருந்து மாட்டுத்தாவணி பேருந்து நிலையக் கடைகளின் வாடகையையும் 15% உயர்வு செய்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.876</u>**

**15 சதவிகிதம் (15%) உயர்வு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**<u>5) ம.வ.4/74498/93</u>**

மதுரை மாநகராட்சி சொக்கிகுளம் இரத்தினசாமி நாடர் தெருவில் மாநகராட்சிக்குச் சொந்தமான சர்வே எண். 2744ல் 33644 ச.அடி. நிலத்தை ரோட்டரி சங்கபெண்கள் குழுவில் நடத்தப்படும் குழந்தைகள் பள்ளிக்கு (நர்சரி பள்ளி) இலவசமாக கொடுக்க கோரியதில், மாமன்றத் தீர்மானம் எண். 670, நாள். 25.11.1971ல் மாதத்திற்கு ரூபாய் ஒன்று வீதம் ஐம்பது ஆண்டுகளுக்கு குத்தகை கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இதற்கான அரசு ஒப்புதல் வேண்டி அரசுக்கு அனுப்பிய கருத்துரு மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆய்வு அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அரசாணை எண். 2506/ஊ.வ.உ.து., நாள். 26.11.1974ல் மூன்று ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடுவதற்கு மாநரகாட்சிக்கு அதிகாரம் இல்லை என்றும், மாத வாடகை ரூ. 1 என்பது மிகவும் குறைவு என்றும், ஆண்டு வருமானம் ரூ. 12000க்கு மேல் உள்ள அரசு நிலங்களுக்கு மார்கெட் மதிப்பில் 14% குத்தகைக்கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டுமென்றும் குத்தகை காலம் 25ஆண்டுகள் மட்டுமே வழங்கப்படவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி தணிக்கை அறிக்கை 16, நாள். 19.02.1993ல் குத்தகைக் கட்டணம் வருடம் ஒன்றுக்கு ரூ. 12 மட்டுமே வசூலிக்கப்படுவதால், வருவாய் இழப்பில் வசூல் செய்யப்படுவதால், 14% குத்தகைத் தொகை வசூல் செய்யவும், 50 ஆண்டுகள் என்பதை 25 ஆண்டுகள் என நிர்ணயம் செய்து மாற்றியமைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாமன்றத் தீர்மானம் எண். 403, நாள். 04.10.1993 மேற்படி இடத்திற்கு 25 ஆண்டுகள் மட்டும் குத்தகைக்கு விடவும், 1971-72 முதல் ஒவ்வொரு வருடத்திற்கும் மார்கெட் மதிப்பு பெற்று, மேற்படி மதிப்பில் 14% குத்தகை தொகை நிர்ணயம் செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 25 ஆண்டுகள் குத்தகை காலம் எனவும், 1971-72 முதல் 1999-2000 முடிய 14% மதிப்புத் தொகை ரூ. 1,03,33,526/- செலுத்தக் கோரி பள்ளி நிர்வாகத்திற்கு கடிதம் 06.01.1994ல் அனுப்பப்பட்டது. ஆனால் பள்ளி நிர்வாகத்தினர், ஆண்டுக்கு ரூ. 12 மட்டுமே குத்தகைக் கட்டணம் செலுத்தி வந்தனர்.

மேலும் பள்ளி நிர்வாகத்தினர், இவ்வலுவலக 06.01.1994ம் தேதிய நடவடிக்கைக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு மற்றும் மாநகராட்சி மீது W.P.No. 2596/94 ல் வழக்கு தொடர்ந்து WMP.No. 4207/94 ல் 18.02.1994 ல் இடைகால தடை ஆணை பெற்றனர். வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இதற்கிடையில் பள்ளி நிர்வாகத்தினர் மதுரை நீதிமன்றத்தில் OS. No. 437/98 ல் வழக்கு தொடர்ந்து தடை ஆணை பெற்றனர். தடை ஆணைக்குப் பின் மாநகராட்சி பள்ளிக்கு சீல் வைத்தது. பள்ளி நிர்வாகத்தினர் பள்ளிக்கு சீல் வைத்ததை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், 1974ம் வருடத்திய அரசாணை, பள்ளி நிர்வாகத்திற்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் குத்தகையை தடை செய்ய இயலாது என்றும் மாநகராட்சியிலிருந்து வழங்கப்பட்டதில் ரத்து செய்யப்பட்டதாகவும் 13.11.2000ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மாநகராட்சி சட்டம் 47 (1)ன் படி புதிதாக அரசு பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை தொடர வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பு நகல் அரசுக்கு 01.12.2003ல் அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன் 14% குத்தகைத் தொகையை 7% என

மாற்றியமைத்து 1971 முதல் நிலுவையை செலுத்தவும், தவறினால் குத்தகையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கலாம் எனவும் அரசுக்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக அலுவலரின் 09.11.2006 மற்றும் 24.08.2009ம் தேதிய கடிதத்தில் ரோட்டரி சங்க பள்ளிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட இடத்திற்கு அரசாணை எண். 2506, நாள். 26.11.1974ன் படி, 14% குத்தகைத் தொகை நிர்ணயம் செய்வதற்கு பதிலாக 7% ஆக மாற்றி நிர்ணயம் செய்து, உரிய ஆவணங்களுடன் பிரேரணையை மாமன்றத் தீர்மானத்துடன் அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ள, மேற்படி நகராட்சி நிர்வாக அலுவலரின் கடிதம் வாசிக்கப்பட்டு, ஏற்கனவே 14% என்று உள்ளதை மாற்றி விடப்பட்டுள்ள மாநகராட்சி நிலத்திற்கு ஒவ்வொரு வருட நிலமதிப்பில் 7% குத்தகை கட்டணம் நிர்ணயம் செய்வது குறித்தும், அதனை அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறலாம் என்பதற்கு மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.877**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகராட்சி நிலத்திற்கு ஒவ்வொரு வருட நில மதிப்பில் 7 சதவிகிதம் குத்தகை கட்டணம் என நிர்ணயம் செய்து அரசின் ஒப்புதல் பெற வேண்டியது என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**(ஒம்.,) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 23 .02.2010.**
**மதுரை.**

* * * * * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2010ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25-ம் நாள் வியாழக்கிழமை நண்பகல் 01.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>சிறப்பு கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1) Jn.S1/04454/10</u>**

தற்போது இயங்கி வரும் மத்திய காய்கறி அங்காடியை விவசாயிகள் விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படையான வசதிகளுடன் மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் (Tamilnadu State Agriculture Marketing Board) மூலம் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 26.74 ஏக்கர் காலி இடத்தில் சர்வே எண் டிஸ். நம்பர் 5/1, 5/2, 9/1 (Part of Madurai Corporation மாட்டுத்தாவணி மதுரை–ல்) புதிய மத்திய காய்கறி அங்காடி கட்டுவதற்கு 33 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு காலி இடத்தை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டது.

மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.852 நாள் 22.01.2010-ல் மேற்படி புதிய மத்திய காய்கறி அங்காடி மதுரை மாநகராட்சியே கட்டுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது உள்ள நிதி நிலைமையில் ரூ.85.00 கோடி செலவில் முதலீடு செய்து மேற்படி அங்காடியை கட்ட இயலாத காரணத்தினால் புதிய மத்திய காய்கறி அங்காடியை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமே (Tamilnadu State Agriculture Marketing Board) ரூ.85.00 கோடி முதலீடு செய்து கட்டுவதற்கும் இதன் மூலமாக கிடைக்கும் வருவாயில் 5%த்தை பராமரிப்பு பணிகளுக்காகவும் மீதமுள்ள 95%தில் 15%ஐ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கும் 85%ஐ மதுரை மாநகராட்சிக்கு என்கின்ற விகித அடிப்படையில் வருவாயை 33 ஆண்டுகளுக்கு பங்கிட்டு கொள்வதற்கும் கட்டப்படும் புதிய அங்காடியில் 15% தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் ஒதுக்கீடு செய்துக்கொள்வதற்கும் 33 ஆண்டுகள் முடிந்த பின் மேற்படி காய்கறி அங்காடியை இருந்தது இருந்த நிலையில் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யவும் மேற்படி மத்திய காய்கறி அங்காடியை பராமரிப்பு செய்ய கீழ்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைக்கவும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மத்திய காய்கறி அங்காடியை தமிழ்நாடு மாநில வோளண்மை விற்பனை வாரியம் கட்டுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குழு உறுப்பினர்கள் :</u>**

I.. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திலிருந்து கீழ்கண்ட உறுப்பினர்கள்.

1. தலைவர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்
2. முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்
3. செயற் பொறியாளர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்
4. வேளாண்மை துணை இயக்குநர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்
5. செயலர், மதுரை விற்பனைக்குழு

II. மதுரை மாநகராட்சியிலிருந்து கீழ்கண்ட உறுப்பினர்கள்.

1. வணக்கத்திற்குரிய மேயர், மதுரை மாநகராட்சி
2. மரியாதைக்குரிய துணை மேயர், மதுரை மாநகராட்சி
3. ஆணையாளர், மதுரை மாநகராட்சி
4. தலைமைப் பொறியாளர், மதுரை மாநகராட்சி
5. உதவி ஆணையாளர் (வருவாய்), மதுரை மாநகராட்சி

**<u>நிபந்தனைகள்</u>**

1. சர்வே எண். டிஸ். நம்பர் 5/1, 5/2, 9/1 (Part) of Ward XVI Block 65 of Madurai Corporation, Mattuthavani, Madurai நில உரிமம் தொடர்ந்து மாநகராட்சி வசம் இருக்கும். எக்காரணத்தை முன்னிட்டும் நில உரிமம் மாற்றம் செய்ய இயலாது.
2. கட்டிட வரைபட அனுமதி மாநகராட்சியிடம் பெற வேண்டும்.
3. அரசாணையின்படி, மூன்றாண்டு ஒருமுறை மட்டுமே கடைகளுக்கான வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. மதுரை மாநகராட்சி கொடுக்கப்பட வேண்டிய குத்தகை தொகை மூன்று ஆண்டு ஒரு முறை அரசு விதிகளின் படி நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
5. அனைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு (கட்டிடம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை உட்பட) தாங்களே செய்து கொள்ள வேண்டும்.
6. பேருந்து நிலையத்தின் பின்புறம் வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு சாலை அமைக்கப்படவேண்டும்.
7. மத்திய காய்கறி அங்காடி கட்டுவதற்கு தேவையான அனைத்து துறையின் அனுமதிகளை தாங்களே பெற்றுக் கொள்ளவேண்டும்.
8. பொதுப்பணித்துறை (Specification) படி கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.878</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**(ஒம்..) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 19.02.2010.**
**மதுரை.**

* * * * * * * *